சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி பெ.ரேகா (க/பெ. (லேட்) T.பிரபு) தட்டச்சர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி2) துறை**

அரசாணை (2ப) எண்.111

நாள் : 13.10.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, புரட்டாசி – 27

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. குடும்பநல இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண்.1008/குந/நி1/2020, நாள். 23.07.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.

******

**ஆணை:-**

பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் குடும்பநல இயக்குநர், திருவள்ளூர் மாவட்டம், அம்மையார்குப்பம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒட்டுநராகப் (Driver) பணியாற்றிய T.பிரபு என்பவர் 20.11.2015 அன்று பணியிடையே மரணமடைந்து விட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 24.03.1983 என்றும், அவருடைய உத்தேச ஒய்வு பெறும் நாள் 31.03.2041 என்றும் குறிப்பிட்டு, இறந்த அரசு ஊழியரின் மனைவி தனக்கு பணிநியமனம் வேண்டி 19.12.2017 அன்று விண்ணப்பித்திருந்தார் என்றும், அவரது பிறந்த தேதி 22.08.1993 என்றும், மனுதாரராகிய திருமதி பெ.ரேகா என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளையும் பூர்த்தி செய்திருந்ததால், அவரை தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சராகப் பணியமர்த்த உத்தரவிடப்பட்டு, அதன்படி தட்டச்சராக 25.09.2018 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு, தனியர் தட்டச்சராகப் பணியில் சேர்ந்த நாளான 25.09.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. குடும்பநல இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, திருமதி பெ.ரேகா, தட்டச்சர் என்பவரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 25.09.2018 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா.)

3. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண்.13262/க்யூ1/2020-1, நாள் 01.10.2020 மற்றும் அ.சா.எண்.24855/ஜி2/2020, நாள் 07.10.2020-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
குடும்பநல இயக்குநர், சென்னை-600 006.
திருமதி பெ.ரேகா, தட்டச்சர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-600 018.
நகல்
தொழிலாளர்மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை,சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/10/2020
பிரிவு அலுவலர்
15/10/2020